## ஹஜ் எவ்வாறு செய்யவேண்டும்?

1 **ஹஜ் நிறைவேற்றுபவர் முஃப்ரத் அல்லது ஃகாரினான ஹஜ் நிறைவேற்றுபவராக இருந்தால் நிய்யத் செய்து மீஃகாத்திற்குச் சென்று இஹ்ராம் அணிந்து கொள்ளவேண்டும்.**

- ★ **ஹாஜி மீஃகாத்திற்கு உள்ளேயே இருந்தால் அங்கேயே நிய்யத் செய்து இஹ்ராம் அணிந்து கொள்ளவேண்டும்.**
- ★ **ஹாஜி தமத்துஉ முறையில் ஹஜ் நிறைவேற்றுவதாக நிய்யத் செய்திருந்தால், தர்வியயஹ் நாளான துல்ஹிஜ்ஜஹ் 8 ஆம் நாள் தாம் தங்கியிருக்கும் இடத்திலேயே இஹ்ராம் அணிந்து கொள்ளவேண்டும்.**

2 **ஹாஜி மினாவிற்குச் சென்று அங்கே ஸ்ஜுஹர், அஸர், மங்க்ரிப் மற்றும் இஷா ஆகிய தொழுகைகளை நிறைவேற்றவேண்டும்.** தொழுகைகள் ஃகஸ்ரு தொழுகைகளாக நிறைவேற்றப்படும், இருப்பினும், ஜம்ஃஉ முறையில் நிறைவேற்றக்கூடாது.

3 **துல்ஹிஜ்ஜஹ் 9 ஆம் நாள் சூரியன் உதயமானபின் அமைதியாகவும் கண்ணியத்துடனும் அரஃபாத்தை நோக்கிப் புறப்படவேண்டும.** மற்ற ஹஜ் நிறைவேற்றுபவர்களுக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஒரு அதான் மற்றும் இரண்டு இஃகாமத் சொல்லி ஸ்ஜுஹர் மற்றும் அஸர் ஆகிய தொழுகைகளை ஜம்ஃஉ முறையில் நிறைவேற்றவேண்டும். அரஃபாத் மைதானத்தின் எல்லைக்குள் இருக்கவேண்டும் என்பதால் அரஃபாத் எல்லைக்குள் இருக்கின்றோமா என்பதை அறிந்துகொள்ளவேண்டும். அரஃபாத் மைதானத்தில் திக்ரு (தியானம்) துஆ மற்றும் பாவமன்னிப்புக்கோருவதில் ஆழ்ந்திருப்பதோடு ஃகிப்லாவை நோக்கி நிற்கவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கைகளைத் தூக்கி துஆ கேட்டதுபோன்றே துஆ கேட்கவேண்டும், அரஃபாத் மைதானம் முழுவதுமே ஹாஜிகள் சென்றடைந்து தங்கி நிற்கவேண்டிய இடமாகும். அரஃபாத் மைதானத்தில் சூரிய அஸ்தமம் வரையில் தங்கியிருக்கவேண்டும்.

4 **சூரியன் அஸ்தமமானபின் அங்கிருந்து முஸ்தலிஃபாவை நோக்கிச் சென்றுவிடவேண்டும்** மன உறுதி, பொறுமை மற்றும் கவனத்துடன் தல்பிய்யஹ் கூறிக்கொண்டிருக்கவேண்டும். அத்துடன் முஸ்தலிஃபா சென்றடைந்தபின் மங்க்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை ஃகஸராக ஒன்றாகச் சேர்த்து ஜம்ஃஉ முறையில் தொழவேண்டும். ஃபஜ்ரு தொழுகையும் முஸ்தலிஃபாவிலேயே தொழவேண்டும், அதன்பின் வெளிச்சம் பரவும் வரையில், தொழுகைக்குப்பின் தங்கள் கைகளை உயர்த்தி இறைத் தூதர் ﷺ அவர்கள் கைகளைத் தூக்கி துஆ கேட்டதுபோன்றே சுன்னத்

www.uzaifalahi.com

தான அடிப்படையில் மிக அதிகமாகவே துஆ கேட்கவேண்டும், மற்றும் அல்லாஹ்வின் தியானத்தில் ஈடுபடவேண்டும்.

5 **சூரியன் உதயமாவதற்குமுன் முஸ்தலிஃபாவிருந்து தல்பிய்யஹ் கூறியவாறு மினாவை நோக்கிச் சென்றுவிட வேண்டும்** எவருக்கும் காரணம் ஏதும் இருக்குமானல், உதாரணமாக, பெண்கள் அல்லது முதியோர்கள் ஆகியோர் நள்ளிரவுக்குப்பின் மினாவை நோக்கிச் சென்றுவிடலாம். இங்கே ஹாஜிகள் ஜம்ரதுல் உஃக்பாவின்மீது எறிவதற்காக ஏழு கற் களைத் தங்களுடன் எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். மற்ற ஜம் ராத்துகள்மீது எறிவதற்கான கற்கள் அனைத்தையும் மினாவிலிருந்தே எடுத்துக்கொள்ளலாம். ஜம்ரதுல் உஃக்பாவின்மீது எறிவதற்காகவும் மினாவிலிருந்தே கற்களை எடுத்துக்கொண்டாலும் தவறில்லை.

6 **மினாவைச் சென்றடைந்தபின் இச்செயல்களைச் செய்யவேண்டும்:**

- ★ **ஜம்ரதுல் உஃக்பாவின்மீது ஏழு கற்களைத் தொடர்ந்து இடைவிடாது எறிதல், ஒவ்வொரு முறை எறியும்போதும் தக்பீர் சொல்லுதல்**
- ★ **ஃகுர்பானி கொடுத்தல்** ஒருவர் கொடுத்த குர்பானியின் மாமிசத் தைத் தானும் உண்ணவேண்டும் மற்றும் தேவையுள்ளவர்களுக் கும் கொடுக்க வேண்டும்
- ★ **தலைமுடியை மழித்தல் அல்லது வெட்டுதல்** தலைமுடி முழுவதுமா கவே மழிப்பதுதான் சுன்னத்தான் முறையில் சிறந்தது. பெண்கள் இரண்டு அங்குலம்வரை முடியை வெட்டிக்கொள்ளவேண்டும். மேற்கூறப்பட்டவையனைத்தும் அதே வரிசைமுறையில் நிறை வேற்றப்படுவது சிறந்தது. இருப்பினும், அதில் ஏதும் முன்னும் பின்னும் ஏற்பட்டுவிட்டால் தவறில்லை. இவ்வகையில், ஒரு ஹாஜி இந்த அமல்களையெல்லாம் செய்துமுடித்துவிடுவாரே யானால் அவர் இஹ்ராம் அணியும் விதிகளிலிருந்து நீங்கிவிடு வார், ஒரு நிபந்தனை மட்டும் தொடரும், அவர் தன் மனைவி யுடன் கூடுவதைத் தவிர்க்கவேண்டியிருக்கும்.

7 **ஹாஜி அதன்பின் மக்காஹ்விற்குச் சென்று தவாஃப் இஃபாஜ்தா நிறை வேற்றவேண்டும்** தவாஃப் இஃபாஜ்தா நிறைவற்றியபின் ஹாஜி களில் தமத்துஃஉ முறையில் நிறைவேறியவர்கள் சஃஈ செய்து கொள்ளவேண்டும், ஃகாரின் அல்லது முஃப்ரது முறையில் நிறை வேறியவர்கள் தவாஃப் ஃகுதூமிற்குப்பிறகு சஃஈ செய்யவில்லை யென்றால் அவர்களும் சஃஈ செய்து கொள்ளவேண்டும், அதன் பின் அவர்கள் இஹ்ராமுடைய சட்டங்களிலிருந்து முழுமையாக

www.uzairalani.com

விடுபட்டுவிடுவார், அவர்களுக்கு மனைவிகளும் ஹலாலானவர்களாகிவிடுவார்கள். தவாஃப் இஃபாஜ்தா செய்வது மினாவில் தங்கும் நாட்கள் மற்றும் ரம்யுல் ஜிமார் ஆகியவற்றை முடித்துக் கொள்ளும் வரையிலும் தாமதிப்பது அனுமதிக்கப்பட்டதாகும்.

8 **தவாஃப் இஃபாஜ்தாவிற்குப் பிறகு ஹாஜிகள் மினாவிற்குத்திரும்பிவந்து அங்கே தஷ்ரீஃக் நாட்களான துல் ஹிஜ்ஜாவின் 11, 12 மற்றும் 13 ஆம் நாள் ஆகிய மூன்று இரவுகளைக் கழிக்கவேண்டும்** இரண்டு இரவுகள் மட்டுமே தங்கியிருந்தாலும் தவறில்லை.

9 **மினாவில் தங்கியிருக்கும்போது மூன்று ஜம்ராத்துக்கள்மீதும் இரண்டு அல்லது மூன்று நாட்களிலும் நண்பகலுக்குப் (ஜ்ஸவால்) பிறகு கல்லெறியவேண்டும்.** கல்லெறிவது மக்காஹ்விலிருந்து அதிக தூரத்திலுள்ள முதல் ஜம்ரஹ்வில் துவங்கி அதன்பின் இடையிலுள்ள ஜம்ரஹ்வின்மீதும், இறுதியாக கடைசியிலுள்ள ஜம்ரதுல் உஃக்பஹ்வின்மீதும் கல்லெறியவேண்டும். ஒவ்வொன்றின்மீதும் ஏழு கற்களை எறியவேண்டும், ஒரு தடவையில் ஒரு கல் மட்டுமே எறியவேண்டும், ஏழு கற்களையும் ஒன்றாகச் சேர்த்து எறிவது சரியானதல்ல. ஒவ்வொரு கல்லெறியும்போதும் தக்பீர் சொல்ல வேண்டும். எவரும் மினாவில் இரண்டு நாட்கள் மட்டுமே தங்குவதானால் அவர்கள் இரண்டாவது நாள் சூரிய அஸ்தமத்திற்கு முன்பாகவேமினாவிலிருந்துபுறப்பட்டுச் சென்றுவிடவேண்டும். அவ்வாறு செய்யமுடியாமற்போனால், அவர் மூன்றாவது நாளும் அங்கேயே தங்கிவிடவேண்டும். கல்வெறிவதில் ஒருவருக்கு ஏதும் இயலாமையின் காரணம் இருக்குமானால், அவர் தன்னுடைய சார்பாக கல்லெறிவதற்கு ஒருவரை நியமிக்கலாம். அவருடைய சார்பாகக் கல்லெறிபவர் முதிலில் தாம் எறிய வேண்டிய கற்களை எறிந்துவிட்டு அதற்குப்பின் தன்னிடம் ஒப்படைத்தவர் சார்பாகக் கல்லெறியவேண்டும். இவ்விஷயத்தில் இரண்டு பேருடைய சார்பாகவும் ஒரே நேரத்தில் கல்லெறிவது போதுமானதல்ல. இரண்டாவது முறையாக வந்து கல்லெறியவும் தேவையில்லை.

10 **ஹாஜி தன்னுடைய ஹஜ் கடமையை நிறைவேற்றிவிட்டு வீடு திரும்பும்போது அவர் தவாஃபுல் வதாஃ நிறைவேற்றவேண்டும்** மாதவிடாய் மற்றும் பிள்ளைப்பேறுகாலஇரத்தப்போக்குடைய பெண்களைத் தவிர ஒவ்வொருவருக்கும் இது இன்றியமையாததாகும்.

* * *

www.tzahfarzan.com